# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1873 - 2014 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2014.07.25

*1873 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 182 |


**கவனிக்க.-** செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2014, யூன் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/38988
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : EP/28/LES/Bat/KPC/394

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

மன்னார் மாவட்டம், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தலைமன்னார் இலக்கம் PPMN 299 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 4 1/2 இல் 0.4380 ஹெக்டெயர் விஸ்தீரணமுள்ளதுமான காணியை சமய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஸ்ரீ வாலுகாராம விஹாரஸ்தான பொறுப்பு சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 46;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 47 2/2;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 48;
மேற்கு : PPA 1233 வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 2.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2014.05.16 தொடக்கம் 2044.05.15 வரை);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2□ ஆகும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சமய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக் குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2014.05.13 ஆந் திகதி தொடக்கம் 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இந்தக் காணியை குத்தகைக்கு பெற்றுக் கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

நுவணி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, யூலை 11.

7- 638

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/35270
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : CPC/ LC/ LD/4/1/10/13

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கண்டி மாவட்டம், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் பெலுங்கல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கலமுவ எனும் கிராமத்தில் மு.பி.மஹ.2780 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01இல் 0.1936 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள அரச காணியை குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஸ்ரீ வினீத்தாராம விகாரையின் பொறுப்பு சபை மூலம் விண்ணப்பித்துள்ளது எனவும், 2014.02.21 திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி வரி சேர்த்துக் கொள்வதற்காக மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் இணங்க மாற்றியமைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2014.04.29 ஆந் திகதி தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2013 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2 □ ஆகும்;

தவணைப்பணம்.- இல்லை.

டி.டீ.எம்.ஜயதிலக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, யூலை 03.

7- 695

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/34074
பிரதிக் காணி ஆணையாளரின் இல. : மஹி/சங்/ii/1/2/10

**முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

பதுளை மாவட்டம், மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எலேவெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தம்பராவ எனும் கிராமத்தில் குடியேற்ற அதிகாரியினால் ஒழுங்குபடுத்தப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01இல் 01 றூட் விஸ்தீரணமுள்ள காணியை சமய நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஸ்ரீ சுச்சரிதாராம பொறுப்பு சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : டீ.எம்.டிகிரி பண்டாரவின் காணி;
கிழக்கு : எலேவெல பழைய வீதி ஒதுக்கீடு;
தெற்கு : பீ. ஆர். அமராவதீயின் காணி;
மேற்கு : டப். ஜீ.எம்.டப்.சுரவீரவின் காணியாக இருக்கலாம்.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2013.12.05ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி அளித்த 2013 ஆம் ஆண்டிற்கான காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 1/2□ வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

தவணைப் பணம்.- இல்லை;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சமய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், ஸ்கோபின் கமிடி, இலங்கை முதலீட்டு சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(எ) 2013.12.05 ஆந் திகதி தொடக்கம் 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக்காணியை குத்தகைக்கு பெற்றுக்கொண்டுள்ள காரணத்தைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் விண்ணப்பத்திற்கு அமைய இக்குத்தகை வழங்கப்படும்.

எல்.பீ.சாமிகா சுபோதினி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, யூலை 03.

7- 746

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.